**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.113/2024

பெயர்:– நவநீதன் நாள்:18.09.2025

பி.வா.சா. 1ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)

நான் சொக்கநாச்சியம்மன் கோவிலில் பூஜை செய்கிறேன். நான் இந்த கோவிலில் பரம்பரை அறங்காவலராக இருக்கிறேன். வாரிசு அடிப்படையில் நான் பரம்பரை அறங்காவலராக இருக்கிறேன். யாருடைய வாரிசு என்றால் பிச்சை முத்துவின் வாரிசு. பிச்சைமுத்து என்பவர் எனது தகப்பனார். அறநிலையத்துறையில் பரம்பரை அறங்காவலர்கள் என்று உத்தரவு வாங்கியதில் என்னுடைய தகப்பனாரும் ஒருவர். எனது தகப்பனாருக்கு பின்னிட்டு நான்தான் பரம்பரை அறங்காவலர் என்று அறநிலையத்துறையில் பதிவு செய்து உத்தரவு பெற்றுள்ளேனா என்றால் உத்தரவு பெற்றுள்ளேன். அவ்வாறு உத்தரவு பெற்ற விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். உத்தரவு நகலை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான்தான் பரம்பரை அறங்காவலர் என்ற உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்பதால் கோவிலின் சார்பாக நான் சாட்சியம் அளிக்க தகுதியான நபர் அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரம் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து தற்போது யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்றால் வாதி சின்னப்பன் சுவாதீனத்தில் உள்ளது. வாதி சின்னப்பன் எப்போது இருந்து சுவாதீனத்தில் உள்ளார் என்றால் எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்து உள்ளார். பெரியாண்டி, சொக்காண்டி, பிச்சைமுத்து ஆகியோர்கள் எந்த ஆண்டு பரம்பரை டிரஸ்டியாக நியமிக்கப்பட்டார்கள் என்றால் 1967ஆம் ஆண்டு. பரம்பரை டிரஸ்டியாக அவர்கள் நியமிக்கப்பட்ட காலத்தில் தாவா சொத்து யாருடைய சுவாதீனத்தில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. 1967ம் ஆண்டு எனக்கு என்ன வயது என்றால் நான் அப்போது பிறக்கவில்லை. 1967ம்

## Copy of Deposition

ஆண்டிற்கு முன்பு கோவில் நிர்வாகம் யார் வசம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எங்கள் பரம்பரை வாங்கிய உத்தரவை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி உத்தரவில் இந்த கோவில் எப்போது உருவானதோ அந்த காலத்தில் இருந்து எங்கள் முன்னோரும் நாங்களும் பூஜை செய்து வருகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கோவிலை எந்தவிதமான வாரிசுரிமை இடையூறின்றி எங்களுடைய முன்னோர்களுடைய நிர்வாகத்தில் இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய முன்னோர்கள் ஏன் கோவிலின் தாவா சொத்துக்களை தங்களது சுவாதீனத்தில் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்தார்கள் ஆனால் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் சொல்லியுள்ளார்கள். இந்த நிலம் எப்போது கோவிலுக்கு எந்த வருடம் தானமாக வழங்கப்பட்டது என்றால் சுமாராக 1959ம் வருடம் வழங்கப்பட்டது. 1959ம் வருடம் என்பது தவறு என்று சொன்னால் எனக்கு சரியாக தெரியாது. 20ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்து வாதிகளின் சுவாதீனத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் ஆவண எண்.205/1916 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இந்த பூமி வாதியின் முன்னோர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்குள் செய்து கொண்டுள்ளார்கள். கோவில் சொத்தை பாகபிரிவினை செய்ய முடியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 ஆவண எண்.1893/1950 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.3 ஆவண எண்.444/1960 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்திற்குள் அவர்கள் செய்துகொண்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4 என்பது அசல் வழக்கு எண்.307/1971 நாள்.26.07.1971 இந்த நீதிமன்ற தீர்ப்பில் வழக்கின் சொத்துக்கள் பாகபிரிவினையாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவில் சொத்து என்பதை மறைத்து செய்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் இனாம் நிலம் என்று கூறியுள்ளேன். எப்போது கோவில் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் ஆரம்பத்தில் இருந்தே கோவில் பெயரில்தான் உள்ளது. எந்த ஆண்டு முதல் என்றால் அப்போது

## Copy of Deposition

நான் பிறக்கவில்லை என்பதால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.5 கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவின்படி S.R.No.4/67 MI Act, Erode Taluk/67 Dated:23.06.1967ல் பெரியாண்டி என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் தாவா சொத்து மாணிக்கசுந்தரம் சுவாதீனத்தில் உள்ளதாக கூறியுள்ளார் என்றால் தவறுதலாக போட்டுள்ளார்கள். தவறுதலாக போட்டுள்ளார்கள் என்றால் இதே உத்தரவில் இந்த கோவில் பெயரில் பட்டா வழங்கியுள்ளேன் என்பதும் தவறா என்றால் அது சரிதான். பட்டா வழங்கியது சரி. மாணிக்க சுந்தரம் பெயர் சேர்க்கப்பட்டது தவறு. இது நீதிமன்ற உத்தரவு என்பதால் தவறு என்று நான் கூற முடியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.6 ஆவணத்தில் மாண்புமிகு சார்பு நீதிமன்றம், ஈரோடு CMA.No.2/2012ல் மேல் முறையீட்டில் நான் எதிர் மனுதாரர் என்றால் மேற்படி ஆவணத்தில் என்னுடைய பெயர் பேனாவினால் எழுதப்பட்டுள்ளது. மேல் முறையீடு வழக்கில் நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களுக்கு வழக்கு பற்றி எந்த தகவலும் வரவில்லை. வாதி சின்னப்பன் மாண்பு மிகு சார்பு நீதிமன்றம், ஈரோடு அ.வ.எண். 145/2006 ல் பிரதிவாதிகள் எங்கள் பூசாரி வகையறாக்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிலும் பிரதிவாதிகள் எதிர் வழக்காடவில்லை என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.8 ஆவணத்தில் 11.12.1980தேதியில் வாதிகள் தங்கள் சொத்துக்களை பாகம் செய்து கொண்டதில் தாவா சொத்தும் உள்ளது என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.9 ஆவணத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் AS No.563/2003 dated:30.08.2017ம் தேதியிட்ட தீர்ப்பில் தாவா சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் கோவில் சொத்து என்பதை மறைத்து செய்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ. 10 ஆவணம் சின்னப்பன் பெயரில் நிலவரி கட்டிய இரசீது என்றால் அது தவறாக போடப்பட்டுள்ளது. என்னை பரம்பரை அறங்காவலராக நியமித்ததை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யாததால் கோவில் சார்பாக சாட்சியம் அளிக்க எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் அவரது முன்னோர்கள் 1916ம் ஆண்டிற்கு முன்பிருந்தே ஆவணப்படி தாவா சொத்தின் உரிமை மூலம் வாதிகளுக்கு உரியது என்றால் சரியல்ல. நான் பூஜை

**Copy of Deposition**

செய்யும் சொக்கநாத சுவாமி கோவிலுக்கு வாதிகள் மின்கட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்றால் தவறு. உபயமாக யார் வேண்டுமானாலும் செலுத்தலாம். வாதிகளும் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:–இல்லை**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI — Digitally signed by P SRIDEVI Date: 2025.09.18 16:10:27 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |